# பொன்னியின் செல்வன் நாவலில் வல்லவரையன் வந்தியத்தேவன்

**ம. ஜோதி மீனாக்ஷி**

12

முகவுரை

பொன்னியின் செல்வன் நாவலில் மொத்தம் 55 பாத்திரங்கள் குறிப்பிடத்தக்க வகையில் வருகின்றன. அதில் 37 கதாபாத்திரங்கள் முக்கியமானவை. அவற்றிலும் முக்கியமான 15 பாத்திரங்கள் எவை, அவை அந்த நாவலில் என்ன பங்கை வகிக்கின்றன என்பதைப் பார்க்கலாம்.

**வல்லவரையன் வந்தியத்தேவன்**

பொன்னியின் செல்வன் நாவலின் கதாநாயகன் வந்தியத்தேவன்தான். அருள்மொழி வர்மனின் பட்டப் பெயரிலேயே நாவல் அமைந்திருந்தாலும் , அதில் மிக முக்கியப் பாத்திரமாக வருவதென்னவோ வந்தியத்தேவனின் பாத்திரம்தான். இந்தப் பாத்திரத்தின் பார்வையில்தான் நாவலின் பெரும் பகுதி நகர்கிறது. இந்த நாவலில் , வந்தியத்தேவன் பட்டத்து இளவரசனான ஆதித்த கரிகாலனின் நண்பன். சோழ இளவரசி குந்தவைப் பிராட்டியின் காதலன். பிறகு , அருள்மொழி வர்மனின் உயிர்த் தோழன். டி.வி. சதாசிவ பண்டாரத்தார் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரம் நூலில் , "குந்தவைப் பிராட்டி வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு மணம் செய்து கொடுக்கப் பெற்றனள். அவ்வரச குமரன் வேங்கி நாட்டில் வாழ்ந்த கீழைச் சாளுக்கிய மரபினனாதல் வேண்டும்" என்கிறார். ஆனால், கல்கி இதில் இரண்டாவது கருத்தை ஏற்கவில்லை. வந்தியத்தேவன் , வல்லத்து வாணர் குல இளவரசனாய் இருக்கலாம் என்ற நோக்கிலேயே நாவலில் அவனது பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார். தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டுகளில் "ஸ்ரீ ராசராசதேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத்தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்" என வந்தியத்தேவனது பெயர் காணப்படுகிறது. சதாசிவ பண்டாரத்தாரின் நூலிலும் தஞ்சை கல்வெட்டிலும் சேர்த்து வல்லவரையன் குறித்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் சில வரிகள்தான். ஆனால், கல்கியின் நாவலில் பல ஆயிரம் வரிகளில் வந்தியத்தேவனின் பெயர் வருகிறது. பொன்னியின் செல்வன் நாவல் மட்டுமல்லாமல் , வந்தியத்தேவன் வாள் , நந்திபுரத்து நாயகி , வேங்கையின் மைந்தன், உடையார் ஆகிய நாவல்களிலும் வந்தியத்தேவன் வருகிறான் பொன்னியின் செல்வன் என்பது அருள்மொழிவர்மனையே குறிக்கிறது. பிற்காலத்தில் ராஜராஜசோழன் (ஆட்சிக் காலம்: கி.பி. 985 - கி.பி. 1014) என சரித்திரத்தில் இடம்பெற்ற மன்னனுக்கு பெற்றோர் இட்ட பெயர் அருள்மொழி வர்மன். சுந்தர சோழன் எனப்படும் இரண்டாம் பராந்தகச் சோழனுக்கும் அவனது பட்டத்தரசி வானவன் மாதேவிக்கும் பிறந்த மூன்றாவது மகன். பொன்னியின் செல்வன் நாவலில் , குந்தவையின் தம்பி , வந்தியத்தேவனின் தோழன் என்ற வகையில் இந்தப் பாத்திரம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தனக்குக் கிடைத்த தனது சித்தப்பனான உத்தமசோழனுக்கு விட்டுக் கொடுத்ததாகவும் இந்தப் பாத்திரம் புகழப்படுகிறது. தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டுகளின்படி பார்த்தால், தன் தமக்கை குந்தவைப் பிராட்டி மீது பெரும் பற்றுக் கொண்டவராக ராஜராஜ சோழன் காணப்படுகிறார். அதை , பொன்னியின் செல்வன் நாவல் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. சுந்தர சோழன் எனப்படும் இரண்டாம் பராந்தகச் சோழனின் புதல்வி. ராஜராஜ சோழனின் மூத்த சகோதரி.

வல்லவரையன் வந்தியத்தேவனின் மனைவி. பொன்னியின் செல்வன் நாவலில் , பெரும்பாலான சம்பவங்களின் பின்னணியில் குந்தவையின் பாத்திரமே இருக்கிறது. தெளிவான , முக்கியமான முடிவுகளை குந்தவையே எடுப்பதாகக் காட்டப்படுகிறது. சுந்தர சோழன் தஞ்சையில் வசித்தாலும் பழையாறை நகரில் செம்பியன் மாதேவியோடு வசிக்கிறாள் குந்தவை. வானதியை அருள்மொழிவர்மனுக்குத் திருமணம் செய்து வைக்க குந்தவையே முடிவெடுப்பதாகவும் நந்தினியின் சதிகளை முறியடிக்க சிரத்தை எடுப்பதாகவும் இந்த நாவலில் கல்கி காட்டியிருக்கிறார். தஞ்சாவூர் பெரிய கோவில் கல்வெட்டுகளில் "ஸ்ரீ ராசராசதேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத்தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்" என குந்தவையின் பெயர் குறிப்பிடப்படுகிறது. தன் தந்தை மற்றும் தாயின் உருவங்களை தஞ்சை பெரிய கோவிலில் வடிக்கச் செய்த குந்தவை , தன் தந்தையின் பெயரால் சுந்தர சோழ விண்ணகர் ஆதுர சாலை என்ற மருத்துவ நிலையத்தை நடத்த நிலங்களை அளித்திருக்கிறார்.

**வந்தியத் தேவன்**

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற வாணர்குல இளவரசன் ஆவார். வரலாற்றில் புனைவுடன் இணைத்து கதாபாத்திரமாக வடிவமைத்துள்ளார் கல்கி. கதாபாத்திரத்தின் இயல்புவந்தியத்தேவன் கதாபாத்திரத்தினை வீரம் மிகுந்தவனாகவும், முன்யோசனையின்றிச் செயலில் இறங்குபவனாகவும், குந்தவை மீதான காதலில் இன்புறுபவனாகவும் கல்கி வடிவமைத்துள்ளார்.

**ஆதித்த கரிகாலனின்** நண்பர்களில் ஒருவனாகவும் தூதுவனாக வந்தியத்தேவன் குந்தவையை சந்தித்து தன்பணி முடிவடைந்ததைத் தெரிவிக்க பழையாறைக்குச் செல்கிறான். பழையாறைக்கு செம்பியன் மாதேவியை காண செல்லும் மதுராந்தகத் தேவனை ஏமாற்றி , நிமித்தக்காரன் போல மாளிகைக்குள் நுழைகிறான். குந்தவையைக் காண வந்தியத்தேவன் முயலும் போது , பினாகபாணி பழுவூர் வீரர்களுடன் வந்து வந்தியத்தேவனை ஒற்றன் என்று கூறி கைது செய்யக் கூறுகிறான். அந்த வேளையில் ஆழ்வா ா க்கடியான் எனப்படும் திருமலையப்பன் வந்தியத் தேவனை நிமித்தகாரன் என்று ஊரார் நம்பும்படி செய்து குந்தவையை சந்திக்க வைக்கிறான். ஈழத்திற்கு சென்று இளவரசரை சந்தித்தது, பின் கப்பலில் ரவிதாசனிடம் மாட்டிக் கொண்டது , தன்னை காப்பாற்ற வந்த இளவரசர் அருள்மொழி வர்மரும் தானும் கடலில் சுழிகாற்றில் மாட்டிக் கொண்டது என்று அனைத்தினையும் வந்தியத்தேவன் குந்தவை தேவியிடம் கூறுகிறான். குந்தவையின் கட்டளைப்படியே , இளவரசரை **சூடாமணி விகாரத்தில்** சேந்தன் அமுதனும் சென்றிருப்பதை தெரிவிக்கிறான். இதற்குள் இளவரசர் இறந்துவிட்டதாக வதந்தி பரவி மக்கள் பழையாறை அரண்மனையில் கூடுகிறார்கள். அவர்களை சமாதானம் செய்யும் பொருட்டு மீண்டும் நிமித்தகாரன் போல நடிக்கிறான் வந்தியத்தேவன். அதைக் கண்ட பினாகபாணி வந்தியத்தேவனை நந்தினியின் ஒற்றன் என்கிறான். அதனால் கோபமடைந்த வந்தியத்தேவன் பினாகபாணியுடன் சண்டையிடுகிறான். அந்நேரத்தில் பழையாறைக்கு வருகைதரும் **அநிருத்தர்** தன் காவலர்களை விட்டு பினாகபாணியையும் , வந்தியத்தேவனையும் சிறைபிடிக்கிறார். பின்பு குந்தவையுடன் பேசி , காஞ்சிக்கு சென்று ஆதித்த கரிகாலனுக்கு பாதுகாப்பாக இருக்க வந்தியத்தேவனை அனுப்ப திட்டமிடுகிறார். வந்தியத்தேவனுடன் திருமலையப்பனையும் உடன் அனுப்புகிறார். வந்தியத்தேவன் திருமலைக்காக காத்திருக்கும்போது , வானதி தேவி பல்லக்கில் செல்வதை காண்கிறான். திருமலை தன்னிடம் தேவையில்லாத காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்த காரணத்தால் வானதிதேவியை கண்டுகொள்ளாமல் குடந்தை சோதிடரிடம் செல்கிறான் வந்தியத்தேவன். அங்கு வந்தியத்தேவனைத் தொடர்ந்து வந்த வானதிதேவி இளவரசர் நாகைப்பட்டிணத்தில் இருப்பதை வந்தியத்தேவன் மூலம் அறிகிறார். குடந்தை சோதிடர் வீட்டிலிருந்து சென்ற வானதியை சில காளாமுக சைவர்கள் பிடித்துக்

கொண்டார்கள். அமரர் கல்கி எழுதின மாஸ்டர் பீஸ் நாவல் `பொன்னியின் செல்வன்'. சோழகுல வரலாற்றில் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரான ராஜராஜ சோழன் அரியணை ஏறுவதற்கு முந்தைய பின்னணியை மையமா வைச்சு கற்பனை கலந்து எழுதப்பட்டிருக்கும் இந்த புதினம் , தமிழ் நாவல் வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்துனது. கிட்டத்தட்ட பல தசாப்தங்களா விற்பனையில் முக்கியமான இடத்தைப் பிடிச்சிருக்கும் இந்த நாவலோட கேரக்டர்களை நம்ம பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துற ஒரு சின்ன முயற்சிதான் இது. 'பொன்னியின் செல்வன் – கதை நாயகர்கள்'ங்குற இந்த சின்ன சீரீஸோட முதல் எபிசோடுல நாம பார்க்கப்போறது நாவலோட ஹீரோ வல்லவரையன் வந்தியத்தேவனோட கேரக்டரைப் பத்திதான்...

யார் இந்த வந்தியத்தேவன்?

பொன்னியின் செல்வன் நாவலோட கதையே வந்தியத் தேவன் பயணத்தில் இருந்துதான் தொடங்கும். காஞ்சிபுரத்துல இருக்க இளவரசர் ஆதித்த கரிகாலர் , தஞ்சாவூர்ல இருக்க தன்னோட தந்தை சுந்தர சோழருக்கும் பழையாறை சகோதரி குந்தவை தேவிக்கும் அவரிடம் ரகசியமாக ஓலை கொடுத்து அனுப்புவார். தொண்டை மண்டலத்தில் அவரோட பயணம் தொடங்குனாலும் , வீர நாராயண ஏரிக்கரையில்தான் கல்கி அவரை நமக்கு அறிமுகப்படுத்துவார். கல்கியோட கூற்றுப்படி அவர் பழமையான வாணர் குலம் என்றழைக்கப்படும் சிற்றரசர் குலத்தைச் சேர்ந்தவர். வல்லம் என்கிற பகுதியை ஆண்டு வந்ததால் அவர்களை வல்லத்து அரசர்கள் என்றும் குறிப்பிடுகிறார். அவருடைய முன்னோர்கள் வீரத்தில் சிறந்து விளங்கியவர்கள் என்றும் தகவல் அளிக்கிறார். ஆனால் , அவருடைய பெற்றோர்கள் பற்றியோ , உடன் பிறந்தவர்கள் பற்றியோ வேறு எந்த தகவலும் நாவலில் இடம்பெறவில்லை.

வந்தியத்தேவன் பயணம்

நாவல் முழுவதுமே வந்தியத்தேவனின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது. காஞ்சிபுரத்தில் இருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில் , நண்பன் கந்தமாறனின் சம்புவரையர் மாளிகையில் தங்கும் வந்தியத்தேவன் , மதுராந்தகரை அரியணையில் அமர்த்த பழுவேட்டரையர் தலைமையில் நடக்கும் சதியாலோசனையைத் தற்செயலாகக் கேட்டறிகிறான். இடையில் , சோழ அரசின் அமைச்சர் அநிருத்த பிரமாயரின் ஒற்றன் ஆழ்வார்க்கடியனை சந்தித்து, அவன் மூலம் அவனது சகோதரியும் பழுவேட்டரையரின் மனைவியுமான நந்தினியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுகிறார். அவர் கொடுக்கும் பனைமர முத்திரை சின்னத்தை தஞ்சை அரண்மனைக்குள் நுழையப் பயன்படுத்திக் கொள்ளும் வந்தியத்தேவன் , ஒரு வழியாக சுந்தர சோழரை சந்தித்து ஓலையைக் கொடுக்கிறான். அங்கிருந்து பழையாறை சென்று குந்தவை தேவியிடம் அவருக்கான சேதியைச் சொல்லி ஓலையைக் கொடுத்ததும், அவர் இலங்கைக்குப் பயணம் செல்லுமாறு பணிக்கிறார். அதை ஏற்று கோடியக்கரை வழியாக படகோட்டிப் பெண் பூங்குழலியின் உதவியோடு இலங்கை செல்லும் அவன் , ஆழ்வார்க்கடியான் உதவியோடு இளவரசர் அருள்மொழி வர்மரை சந்திக்கிறார். இலங்கையிலிருந்து படகில் திரும்புகையில் புயலில் அருள்மொழியோடு வந்தியத்தேவனும் சிக்கி மீள்கிறார்கள். ஆனால் , அப்போது உடல்நலமில்லாமல் போகும் இளவரசரை பூங்குழலியோடு சேர்ந்து நாகை சூடாமணி விஹாரத்தில் சேர்க்கிறார். இந்த செய்தியை பழையாறை சென்று குந்தவை தேவியிடம் சொல்கிறான் வந்தியத்தேவன். அதே சமயத்தில் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு ஆதித்த கரிகாலன் செல்ல இருக்கும் சேதி தெரிந்து , அவரை அங்குபோகாமல் தடுக்க வந்தியத்தேவனையே குந்தவை அனுப்புகிறார். அது முடியாமல் போகவே , சம்புவரையர் மாளிகையில் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலன் கொல்லப்படுகிறார். கொலைப்பழியும் வந்தியத் தேவன் மீது விழுகிறது. சிறையில்

அடைக்கப்படும் வந்தியத்தேவன் , ஒரு கட்டத்தில் அங்கிருந்து தப்புகிறார். பின்னர் , பழையாறை அரண்மனையில் ஆற்றில் குதிக்கும் கந்தன்மாறனின் சகோதரி மணிமேகலையை காப்பாற்றுகிறார். வந்தியத்தேவன்பால் தூய அன்பு கொண்டிருந்த மணிமேகலை, இறுதியில் அவர் மடியிலேயே உயிரை விடுவார். பழுவேட்டரையரால் கொலைப்பழியில் இருந்து தப்பும் வந்தியத் தேவன் , அருள்மொழி வர்மரின் ஆசைக்கிணங்க மதுராந்தகருக்கு முடிசூட்ட உதவுவான். இறுதியில் , தான் மனம் கவர்ந்த சோழகுல இளவரசியும் அருள்மொழியின் சகோதரியுமான குந்தவையை மணந்துகொள்வார்.

இப்படியாக பொன்னியின் செல்வன் நாவலின் முதல் அத்தியாயமான 'ஆடித்திருநாள்' தொடங்கி ஐந்தாம் பாகத்தின் இறுதியில் வரும் 84-வது அத்தியாயமான `தியாக சிகரம் ' வரை வந்தியத்தேவன் நீக்கமற நிறைந்திருப்பார். பொன்னியின் செல்வன் வாசகர்களின் மனம் கவர்ந்த கேரக்டர்களுள் வந்தியத்தேவன் முதன்மையானவர். சோழ இளவரசரின் பெயரைத் தாங்கி நிற்கும் பொன்னியின் செல்வன் நாவலின் உண்மையான கதாநாயகன் வந்தியத்தேவன்தான். வாழ்நாளில் இவ்வளவு பயங்கரமான சிக்கல்கள் ஏற்பட்டு , அதிலிருந்து தப்ப வந்தியத்தேவனால்தான் முடியும் என்று வாசகர்களை ஆழமாக நம்பவைத்திருப்பார் கல்கி. அந்த அளவுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சாகாவரம் பெற்றது வந்தியத்தேவன் கேரக்டர்

தேமொழி

**ஜோஸப் கேம்பெல்** (Joseph Campbell, 1904 – 1987), என்ற அமெரிக்க புராணவியலாளர் (American Mythologist), உலக மதங்களையும் அவற்றின் புராணக் கதைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர். அதன் பயனாக உலகில் உள்ள புராணக் கதைகள் அனைத்தும் ஒரே வகையான அடிப்படை நியதிகளையே கொண்டிருக்கின்றன எனக் கருதினார். இதனை இவர் "**ஒற்றைப் புராணம்**" (monomyth) என்ற கோட்பாடாக அறிமுகப்படுத்தினார். அதாவது உலகில் வழங்கி வரும் கதைகளனைத்தும் ஒரே அடிப்படையில் அமைந்தவை , அதன்படியே ஒவ்வொரு மனித வாழ்க்கையும் வாழ்ந்து காட்டப் படுகிறது என்பது அவர் முடிவு. இவர் 1949 ஆம் ஆண்டு இக்கருத்தை மையமாகக் கொண்டு "**ஆயிரம் முகங்களுடைய நாயகன்**" (The Hero with a Thousand Faces) என்ற நூலை எழுதினார். அவர் அப்புத்தகத்தில் கதைகளில் வரும் "**கதாநாயகனின் பயணம்**" (Hero's Journey) எவ்வாறு ஒற்றைப் புராண விதிகளைக் கொண்டிருக்கிறது என்பதனை பயணத்தின் பல கட்டங்களையும் பட்டியலிட்டு விவரித்தார்.

"A hero ventures forth from the world of common day into a region of supernatural wonder: fabulous forces are there encountered and a decisive victory is won: the hero comes back from this mysterious adventure with the power to bestow boons on his fellow man."
– Joseph Campbell

**ஒற்றைப் புராணத்தின் வாழ்க்கைப் பயண நிலைகள்:** நாயகன் தீரங்களை நிகழ்த்தும் பயணப் பாதையின் பொதுவான அடிப்படைசூத்திரம **பிரிவு–துவக்கம்–திரும்பி வருதல்** என்றகருவினைக்கொண்டதாகும்.

(இங்கு குறிப்பிடப்படும் நாயகனின் வாழ்க்கைப் பயண நிலைகள் , கலிஃபோர்னியா பெர்க்லி பல்கலைக் கழகத்தின் "**இலக்கியத்தின் ஊடாக வரலாற்றை அறியும் திட்டம்**" (History Through Literature Project, University of California, Berkeley, >>http://orias.berkeley.edu/hero/about.html) வழங்கும் நிலைகளை ஆதாரமாகக் கொண்டு கொடுக்கப் பட்டுள்ளது.

ஒற்றைப் புராணம் குறிப்பிடும் கதாநாயகனின் வாழ்க்கைப் பயணத்தின் பல்வேறு நிலைகள்:

(1) பிறப்பு:

நாயகன் கருவில் தோன்றியது , பிறப்பு, வளர்ப்பு ஆகியவை அதிசயங்கள் நிறைந்த வகையில் இருக்கும். அவை அவனது உயர்ந்த தனித்தன்மையைக் குறிக்கும் ஒற்றைப் புராணத்திற்கு அடிப்படையாக அமையும்.

(2) சாதனைபுரியஅழைப்பு:

நாயகன் சாகசப் பயணத்திற்கான சூழ்நிலை உருவாவதாலோ அல்லது தூதுவர் போன்றவராலோ அழைக்கப் படுவான். அந்த அழைப்பை நாயகன் விருப்பத்துடனோ அல்லது நிர்பந்தத்தின் பேரிலோ ஏற்றுக் கொள்வான் .

(3) உதவியாளர்கள்:

பயணத்தின் துவக்கத்தில் நாயகனின் நலம்விரும்பி தேவையான உதவிகளைப் புரிவார். இந்த உதவியைச் செய்யும் வழிகாட்டிகளாய் வருபவர்கள் பெரும்பாலும் மந்திரவாதி, வயது முதிர்ந்த பெரியோர், வினோதமான குள்ளர்கள் மற்றும் தேவதைகள் ஆவார்கள். அத்துடன் தாயத்து, பாதுகாப்பு கவசங்கள் போன்றவற்றையும் கொடுத்து உதவுவார்கள்.

(4) நிர்ணயித்தவரம்பைமீறுதல்:

நாயகனின் பயணம் ஒரு உச்சகட்ட நிலையை அடையும்பொழுது , அவன் ஒரு துன்பத்தில் உழன்று சராசரி வாழ்க்கையைவிட வேறுபட்ட தீரச் செயல்களைப் புரியும் நிலைக்குச் செல்ல வேண்டும். இந்த அனுபவம் வலியற்றதாக ஒரு இருண்ட குகைக்குள் நுழைந்து வருவதாகவும் இருக்கலாம் , அல்லது திமிங்கிலத்தால் விழுங்கப்படும் கொடுமையைப் போன்றதாகவும் இருக்கலாம். இக்கட்டத்தின் தனிச் சிறப்பு, நாயகனின் அனுபவத்தை தினசரி நடவடிக்கைகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதாகும்.

(5) சோதனைகள்:

கனவு போன்ற சாகசம் நிறைந்த பயணத்தைத் தொடரும் கதைத் தலைவன் அப்பயணத்தில் பல சோதனைகளைத் அடுத்தடுத்து சந்திக்க நேரிடும். இந்தச் சோதனைகள் கொடூர அரக்கர்களை , மந்திரவாதிகளை, எதிரியின் படைகளை , அல்லது இயற்கையின் தாண்டவாங்கள் போன்றவற்றை எதிர்கொள்ளவதாக இருக்கும். ஒவ்வொரு போராட்டத்திலிருந்தும் வெற்றிகரமாக மீண்டு வருவது கதாநாயகனின் திறமையை , போராட்டத்தின் இலக்கை அடைய அவனுக்கு உள்ளத் திறமையை நிரூபிக்கும்.

(6) உதவியாளர்கள்:

பெரும்பாலும் நாயகனின் பயணத்தில் அவனது உற்ற தோழமைகள் , நட்புகள் அவனுக்கு உதவி செய்து சோதனைகளில் இருந்து அவன் மீண்டு வர உதவுவார்கள். சில கதைகளில் இவ்வாறு உதவி செய்பவர்கள் தெய்வீகத் தன்மை போன்ற சக்தி வாய்ந்தவர்களாகவும் இருப்பார்கள்.

(7) உச்சகட்டம்/இறுதிப்போர்:

இறுதியான முக்கியத் தருணத்தில் நாயகன் எதிரியுடன் போரிட வேண்டியிருக்கும். இந்த எதிரி அரக்கன், மந்திரவாதி, எதிரிப்படை வீரர்கள் போன்றவர்கள். இவர்களுடன் போர் புரிந்து நாயகன் பயணத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவான்.

(8) தப்பியோடுதல்:

கடமையை நிறைவேற்றிய பின்பு தனது சராசரி வாழ்விற்குத் திரும்புவதற்கு கதாநாயகன் தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும் கட்டம் இது. நாயகன் எதிரியை ஆத்திரப்படுத்தியிருந்தால் , எதிரியின் பொருளைக் கவர்ந்து வர நேர்ந்திருந்தால் , அல்லது கொடிய அரக்கனை அழித்திருந்தால் , இவ்வாறு

திரும்புவது அவசரமாகத் தப்பியோடும் செயலாக இருக்கும். அவ்வாறில்லாமல் கதாநாயகன் தேடியது அவனுக்கு முழுமனதுடன் வழங்கப் பட்டிருந்தால் இந்த ஓட்டம் ஆபத்தற்றதாகவும் இருக்க வாய்ப்புள்ளது.

(9) திரும்புதல்:

இக்கட்டத்தில், நாயகன் மீண்டும் பயணத்தின் சோதனை எல்லையைக் கடந்து நிகழ்கால உலகிற்கு வந்து தினசரி வாழ்க்கையை வாழ வேண்டும். இது விழித்தெழுதல் , மறுபிறவி எடுத்தல் , உயிர்த்தெழுதல் போன்றவையாகவோ , அல்லது குகை , காடு போன்றவற்றை விட்டு வெளிவருவதாகவோ இருக்கும். சில நேரங்களில் கனவு போன்ற பயண உலகில் பயணிக்கும் நாயகன் நிஜ உலகின் சக்தி ஒன்றினால் பழைய வாழ்க்கைக்கு இழுத்து வரப்படுவான்.

(10) சஞ்சீவி/நிவாரணி:

நாயகன் பயணத்தின் போது பெற்ற பொருள், அறிவு, அனுபவம், வரம் போன்றவை தினசரி வாழ்வில் உபயோகப் படுத்தப் படும். பெரும்பாலும் இவை வாழ்க்கையின் குறைகளை நீக்கப் பயன் பட்டாலும் , சில நேரங்களில் சமுதாதயத்தில் கதாநாயகனின் பங்களிப்பு என்ன என்பதையும் வரையறுக்கும்.

(11) வீடு:

கதாநாயகன் தான் துவங்கிய இடத்திற்கே மீண்டும் வந்து சேர்தல். பயணத்தில் பெற்ற வரத்தை , வெற்றியை, அனுபவத்தைக் கொண்டு தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவுவது பயணத்தின் இறுதிக் கட்டம்.

ஒரு சில கதைகளோ , புராணங்களோதான் குறிப்பிடப்பட்ட அனைத்து பயண நிலைகளையும் கொண்டிருக்கும். ஒரு சிலவற்றில் பல நிலைகள் அமையப் பெற்றிருக்கலாம் , சில கதைகள் சில நிலைகளைக் கொண்டிருக்கும் , மேலும் சில ஓரிரு நிலைகளை மட்டும் விரிவாகக் கொண்டிருக்கும். அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள இந்த பயண நிலைகளின் வரிசையும் பல கதைகளில் வெவ்வேறு வகையில் மாறு பட்டிருக்கும். சிலநேரங்களில் இந்த சுழற்சி ஒருமுறைக்கும் மேலும் இடம் பெறக்கூடும். இலக்கிய அல்லது புராணக் கதாநாயகர்களின் "வாழ்க்கை சுழற்சி " அல்லது ஒவ்வொரு மனிதனின் ஒவ்வொரு "வாழ்நாள் சுழற்சி "யும் கதாநாயகனின் பயணம் என்று ஜோஸப் கேம்பெல் குறிப்பிட்டதன் அடிப்படை நியதியிலேயே அமைந்திருக்கிறது என்பதனைக் கூர்ந்து கவனித்தால் புலப்படும். புராணங்களில், புத்தர், ஏசு, மோசெஸ் போன்றோரின் வாழ்க்கைப் பயணமும் இராமாயணமும் வாழ்க்கை சுழற்சி பயண நிலைகளைக் கொண்டிருப்பதற்கு எடுதுக்காட்டகக் கொடுக்கப் படுகிறது. தற்காலக் கதைகளில் '**ஹாரி பாட்டர்**' (Harry Potter), '**ஸ்டார் வார்ஸ்**' (Star Wars), '**மேட்ரிக்ஸ்**' (Matrix) கதைகள் மற்றும் திரைப்படங்களின் கதைகளில் இந்த வாழ்க்கை சுழற்சி தத்துவம் அடிப்படையாக இருப்பது தெரிகிறது. ஸ்டார் வார்ஸின் இயக்குனர் ஜோஸப் கேம்பெல் குறிப்பிட்ட வாழ்க்கை சுழற்சி நியதியையும், மற்ற பல உலக புராணக் கதைகளின் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஸ்டார் வார்ஸ் கதையை அமைத்ததாகக் கூறியுள்ளார். **கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி** (1899-1954) அவர்கள் எழுதிய "**பொன்னியின் செல்வன்**" கதையுடன், ஜோஸப் கேம்பெல் குறிப்பிடும் ஒற்றைப் புராணக் கோட்பாட்டையும் , கதாநாயகனின் பயணத்தின் நியதிகளையும் ஒப்பிட்டால் அது பொன்னியின் செல்வன் கதை ஓட்டத்துடனும் பொருந்துகிறது. பொன்னியின் செல்வன் கதையினைப் படித்திருக்காத தமிழர்கள் இருப்பது அரிது. எனினும் படித்திராத ஒரு சிலருக்காகக் கதையின் சுருக்கம் கீழே கொடுக்கப் படுகிறது. ஐந்து பெரும் பகுதிகளாக வந்த வரலாற்றுக் கதையை முடிந்தவரை மிகச் சுருக்கமாகக் கொடுக்கும் முயற்சி

எடுக்கப்பட்டுள்ளது. பொன்னியின் செல்வன் கதை சோழப் பேரரசின் , தமிழகத்தின் மிகவும் புகழ்வாய்ந்த மன்னர் ராஜ ராஜ சோழனைப் பற்றியது. இக்கதை அவருக்கு முடிசூட்டிய பின்னணியைக் குறிப்பது என்றாலும் கதைத் தலைவன் அவர் அல்ல. அரசரின் நண்பன் **வல்லவரையன் வந்தியத்தேவன்**தான் கதையின் நாயகன். வந்தியத்தேவனின் பயணத்தைப் பற்றியக் கதையே பொன்னியின் செல்வன். இனி கதையின் சுருக்கம். கதை தெரிந்தவர்கள் இப்பகுதியைத் தாண்டிச் சென்று அடுத்த ஒப்பீடு பகுதியிலிருந்து மேலே தொடரலாம்.

**கதாநாயகன் வந்தியதேவனின் பயணத்துடன் ஒப்பீடு:**

ஒற்றைப்புராணத்தின் கதாநாயகனின் பயணத்தின் நிலைகளாக ஜோஸப் கேம்பெல் குறிப்பிடும் நிலைகளை பொன்னியின் செல்வன் கதையுடன் ஒப்பிட்டுக் கீழ்வரும் நிலைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் கவனம் கொள்ள வேண்டியது அனைத்து நிலைகளும் அமையத் தேவையில்லை, அத்துடன் அவை அதே வரிசையிலும் அமையத் தேவையில்லை என்ற விதி. ஆனாலும் பொன்னியின் செல்வனின் கதையோட்டம் குறிப்பிடத் தக்க மாறுதல்களின்றி ஒற்றைப் புராண கதாநாயகனின் பயணநிலைகளைப் பின்பற்றுவதைக் கீழ்வரும் கதைப்பகுதியின் மேற்கோள்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். சாதனை புரிய அழைப்பு:

ஆதித்ய கரிகாலனின் தூதுவனாக தஞ்சைப் பயணம் மேற்கொள்ளல்

உதவியாளர்கள்: நந்தினியின் முத்திரை மோதிரத்தைப் பெற்று கோட்டைக்குள் செல்லல்

நிர்ணயித்த வரம்பை மீறுதல்: இருண்ட கருவூல வழியாக பழுவேட்டரையரிடம் இருந்து தப்பி ஓடுதல்

சோதனைகள்: இலங்கைப் பயணத்தின்பொழுது ஏற்படும் சோதனைகள் , சிறை செய்யப் படுத்தல் , புயலில் பாதிக்கப் படுத்தல்

உதவியாளர்கள்: இலங்கைப் பயணத்திற்கு பூங்குழலியும் , இளவரசனை சந்திக்க ஆழ்வார்கடியானும் உதவுதல்


உச்சகட்டம்: புயலில் சிக்கிய மரக்கலம் மூழ்கி உயிருக்குப் போராடுதல்

தப்பியோடுதல்: குந்தவையின் வேண்டுகோள் படி இளவரசனை அழைத்து வருதல்

திரும்புதல்: பழையாறைக்குத் திரும்பி குந்தவையை சந்தித்தல்

சஞ்சீவி/நிவாரணி: குந்தவையின் காதலைப் பெறுதல்

வீடு: கடம்பூருக்குத் திரும்பி மணிமேகலையின் மரணத் தருவாயில் உடன் இருத்தல்




முடிவுரை

இங்கு குறிப்பிடப்படுவது முழுக்கதைக்கும் உள்ள ஒப்பீடு. கதையை நன்கு அறிந்தவர்கள் இந்த ஒற்றைப்புராண வாழ்க்கை சுழற்சி முறையானது ஒருமுறைக்கும் மேலும் பொன்னியின் செல்வன் கதையில் இடம் பெற்றுள்ளதைக் கண்டுணர முடியும். எடுத்துக்காட்டாக, ஆதித்த கரிகாலனின் தூதுவனாக முதல்முறையும் , குந்தவையின் வேண்டுகோள்படி ஒருமுறை இலங்கைக்கும் , பிறகு இலங்கையில் இருந்து வந்த பின்பு குந்தவையின் வேண்டுகோளை மீண்டும் ஏற்று கடம்பூரில் ஆதித்த கரிகாலனின் உயிர்காக்க வந்தியத்தேவன் பயணிக்கும் மற்றொருமுறையும் இதே வாழ்க்கை சுழற்சி அமைவதை தனித்தனியாகப் பிரித்தும் காணலாம். ஆதித்த கரிகானிடம் இருந்து முதலில் தஞ்சைப்

பயண அழைப்பும் குந்தவையிடம் இருந்து இலங்கை செல்லவும், கடம்பூர் செல்லவும் இரு அழைப்புகள் அடுத்தடுத்து வந்தியதேவனுக்குக் கிடைக்கிறது. இப்பயணங்களையும் தனித்தனியே ஒற்றைப்புராண வாழ்க்கை சுழற்சி முறை கோட்பாட்டிற்கு உட்படுத்த முடியும்.

References:

http://www.jcf.org/new/index.php

http://en.wikipedia.org/wiki/Joseph_Campbell

http://en.wikipedia.org/wiki/The_Hero_with_a_Thousand_Faces

http://orias.berkeley.edu/hero/about.html

http://orias.berkeley.edu/hero/JourneyStages.pdf

http://upload.wikimedia.org/wikipedia/commons/1/1b/Heroesjourney.svg

http://ed.ted.com/lessons/what-makes-a-hero-matthew-winkler

http://www.thinnai.com/index.php?module=displaystory&story_id=20512092

http://www.tamilpaper.net/?p=359

http://en.wikipedia.org/wiki/Ponniyin_Selvan

http://ta.wikisource.org/s/ep

http://poniyinselvan.blogspot.com/

http://tinyurl.com/Vandiyathevans-Journeyபடத்தினைப் பெரிய அளவில் காண >> http://tinyurl.com/Vandiyathevans-Journey]

(**பொன்னியின் செல்வன் கதை** >> http://ta.wikisource.org/s/ep, **பொன்னியின் செல்வன் கதையின் சுருக்கப் பட்ட பதிப்பு** >> http://poniyinselvan.blogspot.com/